உதவி அமர்வு நீதிமன்றம்/சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

எஸ்சி எண்124/2015

| | | |
|---|---|---|
| பெயர் | .. | பொன்னரசு(அசா11) |
| த/பெ. க/பெ | .. | |
| கிராமம் | .. | |
| தாலுகா | .. | |
| தொழில் | .. | |
| ஜாதி | .. | |
| மதம் | .. | |
| வயது | .. | |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2022 ஆண்டு ஏப்ரல்மாதம் 04 ம்நாள் இந்நீதிமன்ற உதவியாளர் அவர்களால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.
04-04-2022

**முதல் விசாரணை**

நான் தற்போது தென்காசி மாவட்டம் ஆலங்குளம் கோட்டத்தில் துணை காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 8.9.14 தேதி நாலாட்டின்புத்தூர் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தேன். அதுசமயம் மேற்கு காவல்நிலைய ஆய்வாளராக கூடுதல் பொறுப்பு பணியில் இருந்தேன். அதுசமயம் கோவில்பட்டி மே.கா.நி.கு.எண்.902/14 பிரிவுகள் 294 பி,307, இதசபடி வழக்கினை விசாரணைக்கு எடுத்துகொண்டு 9.9.14 தேதி காலை 6.00 மணிக்கு சம்பவஇடம் சென்று சாட்சிகள், மூக்கையா, வசந்தகுமார், ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவஇடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர், மாதிரிவரைபடம் தயார்செய்தேன். பின்னர் சாட்சிகள் ஜெயக்குமார், ஸ்டீபன், செல்வத்தாய், முனியசாமி, எம்.ஜி.ஆர் என்ற் செல்லச்சாமி, தெய்வராஜ், மூக்கையா, வசந்தகுமார், மற்றும் முதல்தகவல்அறிக்கை பதிவுசெய்த சார்பு ஆய்வாளர் நவநீதன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். இத்துடன் எனது விசாரணையை முடித்து வழக்கின் கோப்பை மேல்விசாரணைக்காக மே.கா.நி காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். இந்த வழக்கில் தயார்செய்த பார்வைமகஜர் அசாஆ.6, மாதிரி வரைபடம் அசாஆ.7 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.

கு.வி.

இந்த வழக்கில் அசா1 தனது வாக்குமூலத்தில் இடது காது, இடது காது பின்பக்கம், இடது தோள்பட்டை ஆகியவற்றில் காயம்ஏற்பட்டதாக சொல்லவில்லை என்றுசொன்னால் இடது காதில் வெட்டு பட்டு ரத்தகாயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளார். சாட்சி இடது தோள்பட்டையில் வெட்டுவிழுந்ததாக சொல்லவில்லை என்றால் இடது கையில் பட்டு ரத்தவந்ததாக சொல்லியுள்ளார். இடது காதில் சாட்சிக்கு எந்தபக்கத்தில் காயம்ஏற்பட்டது என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி தனது வாக்குமூலத்தில் சம்பவம் முத்துராஜ் என்பவருக்கு தெரியும் என்றும் அவரும் சேர்ந்து தன்னை ஆட்டோவில் அனுப்பிவிட்டதாக செல்லவில்லை என்றால் சரிதான். தெய்வராஜ் என்பவர் தன்னை ஆட்டோவில் அனுப்பிவிட்டதாக சொல்லியுள்ளார். புகார்தாரர் தனது வாக்குமூலத்தில் ஒரு கமலகண்ணன் என்பவரோடு தனக்கு பிரச்சனை ஏற்பட்டு அதன்காரணமாக கமலகண்ணன் கொடுத்தபுகாரில் தன்மீது வழக்குபதிவுசெய்யப்பட்டதாக எந்தவாக்குமூலமும் என்னிடம் அவர் கொடுக்கவில்லை. அதேசமயத்தில் புகார்தாரருக்கும் மேற்படி கமலகண்ணன் என்பவருக்கும் சம்பவஇடம் அருகிலுள்ள தோட்டம் சம்பந்தமாக உரிமையியல் வழக்கு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் கோவில்பட்யில் நடந்து வருவதாக விசாரணையில் மேற்படி புகார்தாரர் வாக்குமூலம் என்னிடம் அளிக்கவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் தன்னுடைய வாக்குமூலத்தில் கோவில்பட்டி மே.கா.நிலையத்திற்கு தான் அடிக்கடி விசாரணைக்கு சென்றுவருவதாக சொல்லவில்லை. சம்பவஇடத்தில் சம்பவத்தின்போது புகார்தாரர் சாப்பிட்டுகொண்டிருந்த உணவுபொருட்கள் அங்கு கிடந்ததாக புகார்தாரர் வாக்குமூலத்தில் என்னிடம்சொல்லவில்லை என்றால் சம்பவத்தின்போது தான் 3 நண்பர்களோடு சாப்பிட்டுகொண்டிருந்தாக சொல்லியுள்ளார். நான் சம்பவஇடத்தை பார்க்கும்போது அங்கு உணவுபொருட்கள் காணப்படவில்லை என்றால்சரிதான். சம்பவஇடத்தில் ரத்தகறை எதுவும் கிடையாது என்றால் நான்பார்வையிடும்போது அங்கு இல்லை. அசா1 சம்பவத்தின்போது ரத்தகறைபட்ட உடையை போலிசாரிடம் வாக்குமூலம்கொடுக்கவில்லை என்றால் சரிதான். அசா6 தெய்வராஜ் தன்னுடைய வாக்குமூலத்தில் அவருடைய உடையிலும் ரத்தகறை பட்டதாகவும் சம்பவத்திற்கு மறுநாள் போலிசாரிடம் அதை ஒப்படைத்ததாகவும் என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் மருத்துவரிடமும்,

போலிசாரிடமும் ஸ்டீபன் என்பவர்தான் சம்பவம்குறித்து வாக்குமூலம்கொடுத்தாக மேற்படி சாட்சி தெய்வராஜ் தன்னுடைய விசாரணையில் என்னிடம்சொல்லவில்லை என்றால் சரிதான். அசா1 ஜெயக்குமார் சாட்சி 8.9.2014 தேதி நான்விசாரித்து மருத்துவமனையில் வைத்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். நான் சொன்னதுபோல் சொன்னநேரத்தில் சொன்னவிதத்தில் வழக்கு சம்பவம்நடைபெறவில்லை என்றும் வழக்குபதிவுசெய்யப்படவில்லை என்றும், வழக்கின் புகார் மற்றும் முதல்தகவல் அறிக்கை பின்னிட்டு வழக்கிற்காக தயார்செய்யப்பட்டது என்றும், நான்சொன்னதுபோல் அசா1 மற்றும் மற்றசாட்சிகளை நான்விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை என்றும், நான் வழக்கின் சம்பவஇடத்திற்கு செல்லவில்லை என்றும் பார்வை மகஜர், மாதிரிவரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார்செய்யப்பட்டதும் என்றும் எனது விசாரணை ஒருதலைபட்சமானது என்றுசொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)R.Rathinavel Pandian
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி